


# Drive Safe

## A GUIDE TO THE RULES OF THE ROAD

(சாலை விதிகளுக்கான ஒரு வழிகாட்டி)



DRIVE SAFE: A Guide to the Rules of the Road

First Edition: 2018

Compiled by: Sumana Narayanan

Edited by: S. Saroja, Amudha .V

Illustrated by: Karna

**Citizen consumer and civic Action Group (CAG)**
New #246, (Old #277B), T.T.K Road (J.J Road)
Alwarpet, Chennai 600 018
Tamil Nadu, INDIA
www.cag.org.in | +91 44 24994458/ 24660387
Email: helpdesk@cag.org.in

All content is the property of CAG and that which does not specify a third party source is licensed for use under Creative Commons Attribution 4.0 International License. All other trademarks, brands and copyrights other than those belonging to CAG belong to their respective owners and are their property.

Designed and Printed by:
COMPUPRINT
Flat C, ARISTO, 9, Second St,
Gopalapuram, Chennai 600 086
Phone : +91 44 28111224/ 28116768 | Email: compuprint@gmail.com
www.compuprint.in

# DRIVE SAFE: A GUIDE TO THE RULES OF THE ROAD

**/accident/:** Something bad that happens which is unexpected or unintended.

The term road accidents is misleading. It gives the idea that the collision of vehicles on the roads happen by chance and are therefore impossible to avoid. Research has shown that this is not true. In most cases there is a clear cause for the 'accident' such as faulty infrastructure, or mechanical problem with the vehicle, or violation of the rules by road users.

In fact, road accidents are now being called road crashes or road traffic incidents. While bringing road crashes to zero is very difficult, it is possible to reduce the number by a large amount. One way to do this is to obey the road rules. The Rules of the Road, 1989 (of the Motor Vehicles Act, 1988) have been framed by the government to ensure maximum safety for everyone who uses the road. Unfortunately many road users in India seem unaware of the basic road rules of the country. People also assume that road rules can be bent/broken for short distances or that they don't apply during the middle of the night. In fact road rules apply at all times and to everyone using the road.

This booklet hopes to serve as a simple guide to some basic road rules. We hope the booklet will serve as an useful tool to anyone wishing to drive safely.

# சாலை விதிகளுக்கான ஒரு வழிகாட்டி

**விபத்து:** எதிர்பார்க்காத, திட்டமிடப்படாத ஒரு கெட்ட நிகழ்வு.

“சாலை விபத்து” என்ற சொற்கூறு தவறாகும். இது, சாலைகளில் ஏற்படும் வாகனங்களின் மோதல் தற்செயலானது போலவும், அதனால் அவற்றை தவிர்க்க இயலாது போலவும், ஒரு எண்ணத்தைக் கொடுக்கிறது. ஆராய்ச்சி, இது உண்மை அல்ல என்று நிரூபித்துள்ளது. அநேக நேரங்களில், தவறான உள்கட்டமைப்பு அல்லது வாகனத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு அல்லது சாலையை பயன்படுத்துவோர் சாலை விதிகளை மீறியது, போன்றவை “விபத்தி”ற்கான தெளிவான காரணமாக இருந்துள்ளது.

உண்மையில், ‘சாலை விபத்துக்கள்’, தற்போது ‘சாலை மோதல்கள்’ அல்லது ‘சாலை போக்குவரத்து நிகழ்வுகள்’ என்று அழைக்கப்படுகின்றன.

சாலை மோதல்களை பூஜ்ஜியத்திற்கு கொண்டுவருவது கடினமாக இருந்தாலும், அதன் எண்ணிக்கையை பெரிய அளவில் குறைக்க இயலும். சாலை விதிகளைப் பின்பற்றுவது, அதற்கான ஒரு முக்கிய வழியாகும். சாலையை பயன்படுத்தும்

அனைவரின் அதிகபட்ச பாதுகாப்பிற்காக சாலை விதிகள், 1989 ஐ (மோட்டார் வாகனச்சட்டம், 1988-இன்) அரசாங்கம் வெளியிட்டது. துரதிர்ஷ்டவசமாக, சாலையை பயன்படுத்தும் அநேகம் பேருக்கு, நம் நாட்டின் அடிப்படை சாலை விதிகள் பற்றி தெரியவில்லை.

குறுகிய தூரங்களுக்கு சாலை விதிகளை உடைக்கலாம் அல்லது தேவைக்கேற்ப வளைத்துக் கொள்ளலாம் என்றும், இரவில் சாலை விதிகள் பயன்படாது என்றும் மக்கள் எண்ணுகிறார்கள். உண்மையில், சாலை விதிகள், எல்லா சமயங்களிலும், சாலையை பயன்படுத்தும் அனைவருக்கும், பொருந்தும்.

இந்தக் கையேடு, சில அடிப்படை சாலை விதிகளுக்கான எளிய வழிகாட்டியாகும். இது, பாதுகாப்பாக வண்டி ஓட்ட விரும்பும் அனைவருக்கும் ஒரு பயனுள்ள கருவியாக இருக்கும் என்று நம்புகிறோம்.

# KEEP LEFT



**Keep left –** All vehicles must drive on the left side of the road except when overtaking another vehicle.

**இடதுபுறம் இருத்தல் -** எல்லா வாகனங்களும், மற்றொரு வாகனத்தை முந்தி செல்லும்போது தவிர, மற்ற நேரங்களில் சாலைக்கு இடதுபுறத்தில் தான் செல்ல வேண்டும்.



# TURNING LEFT

**Turning left –** Before reaching the turn off, the driver must signal left, move to the leftmost lane and slow down. This is also applicable to vehicles planning to stop on the roadside.

**இடதுபுறம் திருப்புதல் –** திருப்பத்தை அடைவதற்கு முன்னால், வாகன ஓட்டுநர் இடதுபுறம் சமிக்ஞை செய்து, சாலையின் இடதுபுறம் நகர்ந்து, வாகனத்தின் வேகத்தை குறைக்க வேண்டும். சாலையோரத்தில் நிறுத்த திட்டமிட்டுள்ள வாகனங்களுக்கும் இது பொருந்தும்.

# TURNING RIGHT

**Turning right** – Before reaching the turn off, the driver must signal right, move to the centre of the road and slow down. Only when there is a long enough break in the oncoming traffic can she turn right. This is because the oncoming traffic has right of way. The turning angle should be such that on turning, the vehicle is on the left side of the road into which it is entering.


**வலதுபுறம் திருப்புதல்** – திருப்பத்தை அடைவதற்கு முன்னால், வாகன ஓட்டுநர் வலதுபுறம் சமிக்ஞை செய்து, சாலையின் மையத்திற்கு நகர்ந்து, வேகத்தை குறைக்க வேண்டும். எதிர் வரும் போக்குவரத்தில் நீண்ட இடைவெளி இருக்கும்போது மட்டுமே திரும்ப வேண்டும். ஏனெனில், எதிர் வரும் போக்குவரத்திற்கே பாதைக்கான உரிமை உள்ளது. வாகனம் திரும்பும் கோணம், அது நுழையும் சாலையின் இடதுபுறத்தில் செல்லுமாறு இருக்க வேண்டும்.



# OVERTAKING

**Overtaking** – To overtake the vehicle ahead, a driver must ensure there is no traffic on the opposite side and then overtake the vehicle on its right. Overtaking on the left is allowed only if the vehicle in front has signalled it is turning right.

**முந்தி செல்லுதல்** - ஒரு வாகனத்தை முந்தி செல்லுவதற்கு முன்னால், வாகன ஓட்டுநர் எதிர் பக்கத்தில் போக்குவரத்து இல்லாததை உறுதி செய்து கொள்ள வேண்டும். அதன் பின், முன்னால் செல்லும் வாகனத்தை அதன் வலதுபுறத்தில் முந்தி செல்ல வேண்டும். முன்னால் செல்லும் வாகனம் வலதுபுறம் செல்லுகிறது என்று சமிக்ஞை செய்தால் மட்டுமே இடதுபுறத்தில் முந்துவது அனுமதிக்கப்படுகிறது.




# OVERTAKING PROHIBITED

**Overtaking prohibited-** Do not try overtaking when:

1. The vehicle behind has begun to overtake you
2. When the road ahead is not clearly visible (such as on a bend)
3. The driver ahead has signalled it is not safe; it is unsafe or causing danger/inconvenience to other road users

**முந்தி செல்ல தடை செய்யப்பட்டுள்ளது** - முந்தி செல்ல முயற்சி செய்யக் கூடாத தருணங்கள்:

1. பின்னால் வரும் வாகனம் உங்களது வாகனத்தை முந்தித் தொடங்கிய போது
2. சாலை முன்னால் தெளிவாக தெரியாதபோது (ஒரு வளைவு போல் இருக்கும் பட்சத்தில்)
3. முன்னால் செல்லும் வாகனத்தின் ஓட்டுநர் அது பாதுகாப்பாக இல்லை, பிற சாலை பயன்படுத்துபவர்களுக்கு அபாயகரமான அல்லது ஆபத்து / சிரமத்தை ஏற்படுத்தும் என்று சமிக்ஞை செய்யும்போது







# CHANGING LANES

**Changing lanes** – When changing lanes, a driver must ensure there is enough space for her vehicle in the lane she is moving into. The driver must also keep in mind the speed at which the vehicle ahead and behind are travelling.


**பாதைகள் மாறும் போது –** பாதைகள் மாறும் போது, வாகன ஓட்டுநர் தனது வாகனத்திற்குப் போதுமான இடம் இருக்கிறதா என்று உறுதி செய்து கொள்ள வேண்டும். தனது வாகனத்திற்கு முன்னும் பின்னும் செல்லும் வாகனங்களின் வேகத்தை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

**Road junctions/intersections –** On approaching a junction, a vehicle must slow to a stop, check for traffic in all directions and then cross the junction.

**சாலை சந்திப்புகள் –** ஒரு சந்திப்பினை நெருங்கும் போது, ஒரு வாகனம், மெதுவாக நிறுத்தப்பட வேண்டும். அனைத்து திசைகளிலும் வரும் போக்குவரத்தை கவனித்த பிறகே சந்திப்பை கடக்க வேண்டும்.




# ROAD JUNCTIONS/INTERSECTIONS




**Right of Way at junctions/intersections** – When joining a larger road, a vehicle must give way to traffic on the larger road. When both roads are of the same size, the vehicle that reaches the junction first has right of way. If two (or more vehicles) reach at the same time, the vehicle to the right has right of way.

**சந்திப்புகளில் பாதைக்கான உரிமை -** ஒரு பெரிய சாலையில் சேரும் போது ஒரு வாகனம், பெரிய சாலையில் செல்லும் போக்குவரத்துக்கு வழி அளிக்க வேண்டும். இரண்டு சாலைகள் ஒரே அளவைக் கொண்டிருக்கும் போது, முதலில் சந்திப்புக்கு செல்லும் வாகனத்திற்கே வழிக்கான உரிமை உள்ளது. இரண்டு (அல்லது அதற்கு மேற்பட்ட) வாகனங்கள் ஒரே நேரத்தில் சென்றடைந்தால், வலதுபுறம் உள்ள வாகனத்திற்கு வழிக்கான உரிமை உள்ளது.




# RIGHT OF WAY AT JUNCTIONS/INTERSECTIONS

# RIGHT OF WAY (PEDESTRIANS)

**Right of Way (Pedestrians)** – Pedestrians have right of way at pedestrian crossings. Vehicles must stop *before* the pedestrian crossing and move only after the pedestrian has reached the pavement.

**வழிக்கான உரிமை (பாதசாரிகள்)** – பாதசாரி கடந்து செல்லும் பாதையில், பாதசாரிகளுக்கு வழிக்கான உரிமை உள்ளது. பாதசாரி கடந்து செல்லும் பாதைக்கு முன் வாகனங்கள் நிறுத்தப்பட வேண்டும். பாதசாரி நடைபாதையை அடைந்தவுடன் மட்டுமே நகர வேண்டும்.



**Right of Way (Emergency Vehicles) -** Fire, Ambulance, Police vehicles have right of way at all times. Vehicles must use their indicator and move to one side of the road and stop, so a clear path is available for the emergency vehicle. Only after the emergency vehicle has gone past can vehicles start moving.

**வழிக்கான உரிமை (அவசர வாகனங்கள்) –** தீ, ஆம்புலன்ஸ், மற்றும் போலீஸ் வாகனங்களுக்கு எப்பொழுதும் வழிக்கான உரிமை உள்ளது. அவசர உதவி வாகனத்திற்கு ஒரு தெளிவான பாதை கிடைக்கும் வகையில், பிற வாகனங்கள், தங்கள் இன்டிகேட்டரை பயன்படுத்தி, சாலையின் ஒரு பக்கம் நோக்கி நகர்ந்து, நிறுத்த வேண்டும். அவசர உதவி வாகனம் கடந்த பின்னரே, பிற வாகனங்கள் நகர வேண்டும்.




# RIGHT OF WAY



**One Way –** In a one way road, all vehicles (including cycles) must drive only in the direction indicated as allowed by the sign board. Reversing is not allowed in a one way road.

**ஒரு வழி பாதை –** ஒரு வழி பாதை சாலையில் அனைத்து வாகனங்களும் (மிதி வண்டி உட்பட), பெயர் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ள திசையில் மட்டுமே செல்ல வேண்டும். ஒரு வழி பாதை சாலையில் பின்புறமாக நகர்வது அனுமதிக்கப்படுவதில்லை.

# ONE WAY

# STOP LINE

**Stop Line –** At intersections and pedestrian crossings, vehicles must stop behind the STOP LINE. If there is no Stop Line, vehicles must stop in line with the centre median or the end of the pavement on that road, or behind the pedestrian crossing (if there is one).

**நிறுத்தும் கோடு –** சந்திப்புகள் மற்றும் பாதசாரி கடக்கும் இடங்களில் வாகனங்கள் நிறுத்தும் கோட்டிற்கு பின்னால் நிறுத்த வேண்டும். நிறுத்தும் கோடு இல்லையென்றால், வாகனங்கள், நடுவிலுள்ள தடுப்பு அல்லது அந்த சாலையில் உள்ள நடைபாதையின் எல்லை அல்லது பாதசாரி கடக்கும் பாதைக்கு பின்னால் நிறுத்த வேண்டும்.



# NO HONKING




**No honking –** Use of horns is prohibited near hospitals, educational institutions, or when no horn signs are present. The lifting of this restriction is marked by the ‘End of Restriction’ sign board which consists of a black circle with a single black diagonal line.


**ஒலி எழுப்பக்கூடாது -** ஒலி எழுப்பான்களின் பயன்பாடு மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் “ஒலி எழுப்பத் தடை” என்று பெயர்ப்பலகைகள் உள்ள இடங்களில் தடை செய்யப்பட்டுள்ளது.

ஒரு கருப்பு வட்டத்தின் குறுக்கே ஒரு கருப்புக் கோடு போட்ட, “கட்டுப்பாட்டின் முடிவு” என்பதைக் குறிக்கும் அடையாளப் பலகை இந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டது என்பதை தெரிவிக்கும்.

# STOPPING DISTANCE

**Stopping distance** – A driver should keep at least one car length distance from the vehicle ahead. The greater the speed of the vehicle, the greater should be the distance maintained between the vehicles. This is to ensure the vehicle time to stop safely.

**நிறுத்தும் தூரம் -** ஒரு வாகன ஓட்டுநர் முன்னால் செல்லும் வாகனத்திலிருந்து குறைந்தபட்சம் ஒரு காரின் நீள தூர இடைவெளியில் செல்ல வேண்டும். வாகனத்தின் வேகம் அதிகரிக்கும் போது, வாகனங்களுக்கு இடையேயான இடைவெளி அதிகரிக்க வேண்டும். வாகனத்தை பாதுகாப்பாக நிறுத்த நேரம் கொடுப்பதே இதன் நோக்கம் ஆகும்.



# RIGHT OF WAY ON SLOPES



**Right of way on slopes**

Vehicles travelling up a slope have right of way.

**சரிவுகளில் (மலைகளில்) பாதைக்கான உரிமை**

சரிவுகளில் (மலைகளில்) மேலே செல்லும் வாகனங்களுக்கு பாதைக்கான உரிமை உள்ளது..

**Speed limits** - Vehicles must follow the speed limit at all times.

**வேக வரம்புகள்** - வாகனங்கள் வேக வரம்பை எல்லா நேரங்களிலும் பின்பற்ற வேண்டும்.




**urban areas - 40 km / h**

நகர்ப்புற பகுதிகளில் 40 கி.மீ/ 1 மணி

# SPEED LIMITS




**near hospitals and educational institutes - 20 km/h unless otherwise specified.**

மருத்துவமனைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் அருகே - 20 கி.மீ. / 1 மணி (வேறு விதமாக குறிப்பிடப்பட்டிருந்தால் தவிர)

**Parking** – On wide roads, vehicles may be parked at an angle to the pavement but should be parallel to each other. On narrow roads, parking is either not allowed or allowed only on one side. In this case, vehicles must be parked parallel to the pavement with sufficient space between vehicles to pull out safely.

**நிறுத்துமிடம்** - பரந்த சாலைகளில் வாகனங்களை நடைபாதைக்கு ஒரு கோணத்தில், ஒன்றுக்கொன்று இணையாக இருக்கும் வகையில் நிறுத்த வேண்டும். குறுகிய சாலைகளில், வாகனங்களை நிறுத்த அனுமதிக்கப்படுவதில்லை அல்லது ஒரு பக்கமாக நிறுத்தி வைக்க மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. இவ்வாறாக இருக்கும் பட்சத்தில், வாகனங்களை பாதுகாப்பாக வெளியே எடுக்க, வாகனங்கள் இடையே போதுமான இடைவெளியுடன் நடைபாதைக்கு இணையாக வாகனங்கள் நிறுத்தப்பட வேண்டும்.



**Parking prohibited -** Parking is prohibited in the following situations:

# PARKING PROHIBITED

1. At intersections where the vehicle will hinder visibility for other road users
2. On bends or curves in the road
3. On the top of a slope
4. On pavements

**வாகனங்களை நிறுத்த தடை -** வாகனங்களை நிறுத்த பின்வரும் சூழ்நிலைகளில் தடை செய்யப்பட்டுள்ளது:

1. மற்ற சாலை பயன்படுத்துபவர்களின் பார்வைக்கு இடையூறாக இருக்கும் வகையில், வாகனத்தை சந்திப்புகளில் நிறுத்துவது
2. சாலையில் வளைவுகளில்
3. சரிவுகளின் மேல்
4. நடைபாதையில்



## Parking prohibited (contd.)

5. Near traffic lights, pedestrian crossings, educational institutes, hospitals, bus stops or if blocking an entrance

6. On the road next to another parked vehicle (double parking)

7. Where No Parking Signs have been placed by the Traffic Police


# PARKING PROHIBITED

## வாகனங்களை நிறுத்த தடை (contd.)

5. போக்குவரத்து விளக்குகளின் அருகே, பாதசாரி கடக்குமிடம், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், பேருந்து நிறுத்தங்கள் அல்லது ஒரு நுழைவாயிலை தடுக்கும் பட்சத்தில்

6. சாலையில், மற்றொரு நிறுத்தப்பட்ட வாகனத்திற்கு அருகில் (இரட்டை நிறுத்தம்)

7. வாகனங்களை நிறுத்தக்கூடாது என்று போக்குவரத்து காவலர்களால் குறிப்பிடப்பட்ட இடங்களில்



# REVERSING




**Reversing –** When reversing into a road or joining the traffic, the driver must give way to the traffic.

**பின்புறமாக நகர்தல் –** ஒரு சாலையில் பின்புறமாக நகரும் போது அல்லது போக்குவரத்தில் சேரும் போது வாகன ஓட்டுநர் போக்குவரத்திற்கு வழி கொடுக்க வேண்டும்.

# HAND SIGNALS

**Hand Signals –** A driver must use the following signals to indicate her intention to other road users.


**Stop -** Raise right forearm vertically with palm facing forward

**Slowing down -** Extend right arm with the palm downward and move the arm up and down several times.

**கை சமிக்ஞைகள் –** சாலையை பயன்படுத்தும் மற்றவர்களுக்கும் தனது எண்ணத்தை குறிப்பிடுவதற்கு ஒரு வாகன ஓட்டுநர் பின்வரும் சமிக்ஞைகளைப் பயன்படுத்த வேண்டும்.

**வாகனத்தை நிறுத்துவதற்கு –** வலது புறங்கையை, உள்ளங்கை முன்னோக்கி, மேல்புறமாக தூக்க வேண்டும்.

**வாகனத்தின் வேகத்தை குறைக்க –** வலது கையை நீட்டி உள்ளங்கையினை கீழ்நோக்கி கையை பல முறை மேலும் கீழும் அசைக்க வேண்டும்.



# HAND SIGNALS



**Hand Signals (contd.)**

**Overtaking -** To allow the vehicle behind to overtake, extend right arm and wave the vehicle forward by moving the arm backward and forward in a semi-circular motion.

**கை சமிக்ஞைகள் (contd.)**

**முந்தி செல்லுதல் -** பின்னால் வரும் வாகனத்தை முந்தி செல்ல அனுமதிப்பதற்கு, வலது கையை நீட்டி, முன்னும் பின்னுமாக, அரை வட்ட இயக்கத்தில் அசைக்க வேண்டும்.

**Hand Signals (contd.)**

**Right turn or to move to the right lane -** Extend right arm with the palm turned down

**Left turn or to move to the left lane -** Extend right arm and rotate it in an anticlockwise direction

# HAND SIGNALS



**கை சமிக்ஞைகள் (contd.)**

**வாகனத்தை வலதுபுறம் திருப்ப அல்லது வலதுபுறப் பாதைக்கு செல்ல -** உள்ளங்கையை கீழ் நோக்கி திருப்பி, வலது கையை நீட்ட வேண்டும்.

**வாகனத்தை இடதுபுறம் திருப்ப அல்லது இடதுபுறப் பாதைக்கு செல்ல -** வலது கரத்தை நீட்டி, கையை இடமிருந்து வலமாக (எதிர் கடிகாரச் சுற்று) சுழற்ற வேண்டும்.

**Traffic Lights**


At a traffic light or signal:

1. Vehicles must start moving **only after** the light turns green.
2. **DO NOT** honk as soon as the light turns green. The vehicles ahead require a few seconds to start moving.

**போக்குவரத்து விளக்குகள்**

ஒரு போக்குவரத்து விளக்கு அல்லது சிக்னலில்:

1. விளக்கு பச்சை நிறத்திற்கு மாறிய பிறகு மட்டுமே வாகனத்தை நகர்த்த வேண்டும்
2. விளக்கு பச்சை நிறத்திற்கு மாறியவுடனே ஒலி எழுப்பான்களை அழுத்தக்கூடாது. முன்னால் நிற்கும் வாகனங்கள் நகர்ந்து செல்லுவதற்கு ஒரு சில வினாடிகள் ஆகும்.




# TRAFFIC LIGHTS

**Traffic Lights**
When approaching a traffic light:

1. If the light turns amber, vehicles **SHOULD NOT** accelerate. Instead they must slow down and indicate they are stopping.

2. If the light is already green, a driver should continue at the same speed (and should not accelerate). If the light changes before she can cross, she must stop.

# TRAFFIC LIGHTS

**போக்குவரத்து விளக்குகள்**

போக்குவரத்து விளக்கினை நெருங்கும் போது:

1. விளக்குகள் ஆம்பர் (மஞ்சள்) நிறத்திற்கு மாறும் போது, வாகனங்களை துரிதப்படுத்தக் கூடாது. அதற்கு பதிலாக மெதுவாக வேகத்தை குறைக்க வேண்டும் மற்றும் வாகனத்தை நிறுத்துவதை குறிப்பிட வேண்டும்.

2. விளக்கு ஏற்கனவே பச்சை நிறத்தில் உள்ளது என்றால், வாகன ஓட்டுநர் அதே வேகத்தில் தொடர வேண்டும் (வாகனத்தை துரிதப்படுத்தக் கூடாது). தனது வாகனம் கடக்கும் முன் ஒளி மாறும் என்றால், வாகனத்தை நிறுத்த வேண்டும்.

**Line of sight -** When driving past a parked vehicle that is blocking the driver's view of the pavement/ platform, she should be cautious as pedestrians may step out on to the road suddenly.

Pedestrians should not cross the road from behind parked vehicles as they will not be visible to the traffic till it is too late. Pedestrians must cross the road in well lit areas for the same reason.

**பார்வைக் கோடு -** ஒரு நிறுத்தப்பட்ட வாகனத்தை கடந்து ஓட்டும் போது, நடைபாதை, வாகன ஓட்டுநரின் பார்வைக்கு தெரியவில்லை என்கிறபோது, பாதசாரிகள் நடைபாதையை விட்டு, திடீரென சாலையில் இறங்கக்கூடும் என்பதை உணர்ந்து, எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.


பாதசாரிகள் நிறுத்தப்பட்ட வாகனங்களின் பின்னால் இருந்து கடந்து செல்லக் கூடாது. ஏனெனில், போக்குவரத்து வாகனங்களின் பார்வையில் அவர்கள் கடைசி நிமிடத்தில்தான் தெரிவார்கள். இதே காரணத்திற்காக, பாதசாரிகள் நல்ல வெளிச்சம் இருக்கும் பகுதிகளில் மட்டுமே சாலைகளைக் கடக்க வேண்டும்.

# LINE OF SIGHT



**Distracted driving –** A driver should not multi task while driving. This includes eating, drinking (even water), talking on the phone (even hands free), combing hair, and texting. Anything that reduces the driver's concentration by even a small amount is enough to cause an accident.

**கவனச்சிதறலோடு ஓட்டுதல் –** ஒரு வாகன ஓட்டுநர், வாகனத்தினை ஓட்டும்போது, பல காரியங்களை செய்யக்கூடாது. இதில் உணவு உண்பது, தண்ணீர் அருந்துவது, தொலைபேசியில் பேசுவது (கைகளை விட்டு விட்டு உட்பட), முடியை வாருவது மற்றும் தகவல்கள் அனுப்புவது ஆகியவை உள்ளடங்கும். ஓட்டுநரின் சிறிய அளவு கவனக்குறைவு ஒரு விபத்து ஏற்பட போதுமானது.



# DISTRACTED DRIVING

**Road conditions –** A driver must reduce her speed when the road is wet or sand/gravel is present. These conditions increase the chance of skidding and at higher speeds the driver will lose control of the vehicle.

**சாலையின் நிலைமை -** சாலைகளில் ஈரப்பதம் அல்லது மணல் குவியல்கள் இருக்கும்போது, வழுக்கும் வாய்ப்பு அதிகம் உள்ளதால், ஒரு வாகன ஓட்டுநர் தன் வேகத்தைக் குறைக்க வேண்டும். இல்லையென்றால், வாகன ஓட்டுநர் கட்டுப்பாட்டை இழக்க நேரிடும்.





# ROAD CONDITIONS

**Right of Way –** When a driver has to drive on the wrong side to avoid an obstruction on her side of the road, she must ensure that there is no oncoming traffic. If there is oncoming traffic, then she must wait as the traffic has right of way.

**பாதைக்கான உரிமை** - சென்று கொண்டிருக்கும் சாலையில் இடையூறுகளை (குடிநீர் மற்றும் மின்சாரத் துறையினரின் வேலைகள்) தவிர்க்க வாகன ஓட்டுநர் எதிர் பக்கத்தில் வாகனத்தை ஓட்ட வேண்டியிருந்தால், அவர் அந்த பக்கத்தில் போக்குவரத்து இல்லை என்பதனை உறுதி செய்து கொள்ள வேண்டும். போக்குவரத்து இருக்கும்பட்சத்தில், காத்திருக்க வேண்டும். ஏனெனில், எதிர்பக்கத்தில் வரும் போக்குவரத்து வாகனங்களுக்குத்தான் வழிக்கான உரிமை உள்ளது.

# RIGHT OF WAY



## Lane markings

**Centre line** – the solid white line in the middle of the road indicates that a vehicle must drive on the left of that line.

**Lane line** – the broken white lines indicate the lanes on each side of the centre line. Vehicles must be driven between these broken white lines.

### பாதைக் குறிப்புகள்

**மையக்கோடு** – சாலையின் நடுவில் உள்ள திடமான வெள்ளைக் கோடு, ஒரு வாகனம் அந்த கோட்டின் இடதுபுறத்தில் செல்ல வேண்டும் என்று குறிக்கிறது.

**பாதைக் கோடு** – உடைந்த வெள்ளைக் கோடுகள் மையக் கோட்டின் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள பாதைகளைக் குறிக்கின்றன. இந்த உடைந்த வெள்ளைக் கோடுகளுக்கு இடையே வாகனங்கள் இயக்கப்பட வேண்டும்.



**Lane markings**

**Road shoulder line –** The solid yellow or white line on each side of the road marks the edge of the road space allotted to vehicles.

**Solid yellow (single or double lines) –** The solid yellow (single or double) line indicates that a vehicle may not cross the line. These are often seen instead of the centre line in high traffic or low visibility areas.

**பாதைக் குறிப்புகள்**

**சாலை தோள் கோடு –** சாலையின் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள திடமஞ்சள் அல்லது வெள்ளைக் கோடு, வாகனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள சாலையின் விளிம்பினைக் குறிக்கிறது.


**திட மஞ்சள் (ஒற்றை அல்லது இரட்டை கோடுகள்) –** திட மஞ்சள் (ஒற்றை அல்லது இரட்டை) கோடு, ஒரு வாகனம் கோட்டைக் கடக்க முடியாது என்பதனைக் குறிக்கிறது. இவை, பெரும்பாலும், அதிக போக்குவரத்து அல்லது குறைந்த வெளிச்சம் உள்ள பகுதிகளில் மையக் கோட்டிற்கு பதிலாக காணப்படுகின்றன.

LANE MARKINGS

# LANE MARKINGS

**Solid and broken line combination** – The centre line is sometimes replaced by a solid line and a broken line combination. Vehicles to the left of the broken line may cross the line to overtake but only after checking it is safe. Vehicles to the left of the solid line may not cross the line.

**திட மற்றும் உடைந்த கோட்டுக் கலவை -** ஒரு மையக் கோட்டிற்கு பதிலாக, சில சமயம், ஒரு திட மற்றும் உடைந்த கோடுக் கலவை இருக்கும். உடைந்த கோட்டின் இடதுபுறமாக உள்ள வாகனங்கள், பாதுகாப்பக இருப்பின் கோட்டைக் கடந்து, முந்தி செல்லலாம். திட கோட்டின் இடதுபுறமாக இருக்கும் வாகனங்கள், கோட்டை கடக்க முடியாது.




**Wearing Seatbelt** – In a car, the driver and the front seat passenger must wear a seatbelt.

**இருக்கை பெல்ட் அணிதல் -** ஒரு காரில், வாகன ஓட்டுநரும் முன் இருக்கையில் அமருபவரும் இருக்கை பெல்டினை அணிய வேண்டும்.

# WEARING SEATBELT

**Wearing helmet**- On a two-wheeler, only 2 persons are allowed to travel (irrespective of age) and both the rider and the pillion must wear an ISI-approved helmet that fits snugly. The chin strap must be fastened and tightened so that it is close-fitting.

**தலைக்கவசம் (ஹெல்மெட்) அணிதல் -** இரு சக்கர வாகனம் ஒன்றில் 2 நபர்கள் மட்டுமே (எந்த வயதினராக இருந்தாலும்) பயணிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். வாகன ஓட்டுநர் மற்றும் பின்னால் பயணிக்கும் நபர் இருவருமே ஐ.எஸ்.ஐ. அங்கீகரித்த கச்சிதமான ஹெல்மெட்டினை அணிய வேண்டும். தாடை வார் இறுக்கமாக இருக்கும்படி அணிய வேண்டும்.




# WEARING HELMET

**Drunk driving** – A person who has consumed alcohol drinks (or drugs) must not drive any vehicle. If they do so and their blood alcohol concentration is more 0.03%, then they can be penalised. If a person under the influence of alcohol causes an accident that results in a death, they can be imprisoned.

**குடிபோதையில் வாகனம் ஓட்டுதல் -** மதுபானப் பொருட்களை (அல்லது போதைப்பொருட்கள்) உட்கொள்ளும் ஒரு நபர் எந்த வாகனத்தையும் ஓட்டக்கூடாது. அவர் அவ்வாறு செய்தால் மற்றும் அவரின் இரத்த மதுபான செறிவு 0.03% க்கு அதிகமாக இருந்தால் அவர் தண்டிக்கப்படலாம். மது அருந்திய வாகன ஓட்டுநர், மரணம் விளைவிக்கும் ஒரு விபத்தை ஏற்படுத்தினால், அவர் சிறையில் அடைக்கப்படலாம்.



**Using Dip/Dim Lights** – The headlight of every vehicle has two positions – high and low beam. High beam is to be used only on highways when the road in front is dark or inadequately lit. Low beam must be the default position.




**டிப் / டிம் விளக்குகளை பயன்படுத்துதல் -** ஒவ்வொரு வாகனத்தின் முன்பகுதியிலுள்ள விளக்கில் இரண்டு நிலைகள் உள்ளன - உயர் மற்றும் குறைந்த பீம். நெடுஞ்சாலைகளில் முன்னால் உள்ள பாதை இருட்டாகவோ அல்லது போதுமான வெளிச்சம் இல்லாமலோ இருந்தால் மட்டுமே உயர் பீம் விளக்குகளை பயன்படுத்த வேண்டும். குறைந்த பீம் இயல்பு நிலையாக இருக்க வேண்டும்.

# USING DIP/DIM LIGHTS

Citizen consumer and civic Action Group (CAG) is a 32-year-old Chennai-based non-profit, non-political and professional organisation that works to protect citizens' rights in consumer and environmental issues, and to promote good governance processes, including transparency, accountability and participatory decision-making.

சிட்டிசன் கன்ஸ்யூமர் அண்டு சிவிக் ஆக்ஷன் குரூப் (சி.ஏ.ஜி.) 32 வருடங்களாக, சென்னையில் இயங்கி வரும் பதிவு செய்யப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனமாகும். இது, குடிமக்களின், நுகர்வோர், சிவிக் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான உரிமைகளைப் பாதுகாக்க செயல்படுகிறது. மேலும், வெளிப்படைத் தன்மையையும், பொறுப்புடைமையையும் மேம்படுத்துவதும், புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஆளுகையை வலுப்படுத்துவதும் இதன் நோக்கம் ஆகும்.

CAG
Citizen consumer and civic Action Group

New #246, (Old #277B), T.T.K Road (J.J Road)
Alwarpet, Chennai 600 018 Tamil Nadu, INDIA
www.cag.org.in | +91 44 24994458/ 24660387 | Email: helpdesk@cag.org.in